திரு. எஸ். கணேசன் : சினிமாத்தொழில் பயிற்சிக் கல்விக் கூடத்தில் ஆண்டுதோறும் எவ்வளவு மாணவர்கள் ஒவ்வொரு துறையிலும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த ஆண்டு மாத்திரம் பயிற்சிக்கு 82 பேர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். 1960-இல் இருந்து பத்து அல்லது பதினைந்து பேர்களுக்குத்தான் பட்டம் வழங்குகிற நிலை இருந்தது.

Special Officers for Tamil development

* 217 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there are proposals under the consideration of the Government to appoint special officers for the development of Tamil in districts ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தமிழ் வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் ஆய்வுத் தனி அலுவலர் ஒருவர் உள்ளார். அவர் ஆட்சி மொழிச் சட்டத்தை மாநிலத்திலுள்ள அரசு அலுவலகங்கள் யாவற்றிலும் துரிதமாகச் செயல்படுத்துவதை அழுத்தமுற ஆய்வு செய்யும் பணியைச் செய்கின்றார். மேலும் 9 ஆய்வுத் தனி அலுவலர்களை மாவட்டங்களில் நியமித்து ஆட்சி மொழிச் சட்டச் செயலாக்கத்தை விரைவுபடுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

கயத்தாறு, ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள டிராக்டர்கள்

* 218 வினா.—திரு. எம் முத்தையா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கயத்தாறு, ஒட்டப்பிடாரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் டிராக்டர்களின் பராமரிப்புக்காக 1970–71-ம் ஆண்டில் செலவான தொகை எவ்வளவு ?

(இ) மேற்கண்ட ஊராட்சி ஒன்றியங்களில் டிராக்டர்கள் மூலம் 1970–71-ம் ஆண்டில் வரவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :

	பராமரிப்புக்காக செலவு.
(அ) (1) கயத்தாறு ஊராட்சி ஒன்றியம்.	ரூ. 5,101-75
(2) ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம்.	ரூ. 11,945-00
வரவு.	
(இ) (1) கயத்தாறு ஊராட்சி ஒன்றியம்.	ரூ. 3,376-00
(2) ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம்.	ரூ. 8,339-00

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, தனியார் வைத்திருக்கும் டிராக்டர்கள் மூலம் லாபம் கிடைக்கிறது. ஆனால் ஊராட்சி ஒன்றியங்களில் வருமானத்தைவிட செலவுதான் அதிகமாக இருக்கிறதே, இதைப்பற்றி அரசு ஆராயுமா ?